செய்தி வெளியீடு எண்: 449 நாள் : 15.09.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (15.9.2015) தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சியுடன் அப்பல்லோ ஆஸ்பிட்டல் எண்டர்பிரைசஸ் லிமிடெட் இணைந்து சென்னை, நுங்கம்பாக்கம் – வாலஸ் கார்டன் முதல் தெருவில் 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள அடுக்குமாடி வாகன நிறுத்துமிடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

சென்னை, நுங்கம்பாக்கம், வாலஸ் கார்டன் பகுதியில் நிலவி வரும் வாகன நெருக்கடிகளை களையும் வகையில், சென்னை, வாலஸ் கார்டன் முதல் தெருவில் அடுக்குமாடி வாகன நிறுத்துமிடத்தை நிறுவுவதற்கு சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 11 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான 26877 சதுர அடி நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வடிவமைப்பு, கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (Design, Build, Operate and Transfer) அடிப்படையில் இத்திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தை பொது மற்றும் தனியார் இணைந்து நிறைவேற்றும் வகையில் அப்பல்லோ ஆஸ்பிட்டல் எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, நுங்கம்பாக்கம் – வாலஸ் கார்டன் முதல் தெருவில் 26877 சதுர அடி நிலப் பரப்பளவில், 7 தளங்கள் கொண்ட 249 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் மின்தூக்கி மூலம் மேல்தளத்தில் 230 இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதியுடன் 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள சென்னை மாநகராட்சியின் முதல் முழுவதும் தானியங்கி அடுக்குமாடி வாகன நிறுத்துமிடத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இப்புதிய அடுக்குமாடி வாகன நிறுத்துமிடத்தின் மூலம் சென்னை மாநகராட்சிக்கு 46 லட்சம் ரூபாய் வருட வாடகையாகவும், வருடத்திற்கு 5 சதவிகிதம் வாடகை அதிகரித்து பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி, சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை சா.துரைசாமி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அப்பல்லோ மருத்துவமனைகளின் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி, மேலாண்மை இயக்குநர் திருமதி சுனிதா ரெட்டி, தலைவர் (புதிய முயற்சிகள்) திரு. சத்தியநாராயணா ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 15.9.2015